பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை

பூமியானது ஒழுங்கின்மையும்
வெறுமையுமாய் இருந்தது
ஆழத்தின்மேல் இருள் இருந்தது
தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல்
அசைவாடிக்கொண்டிருந்தார்.

ஆதி 1:2

செய்தி மலர்
ஆகஸ்டு 2011

மலர் 12
இதழ் 04



# செயலாளரிடமிருந்து

பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் உங்களிடத்தில் கிருபை பெருக வாழ்த்துகிறேன்

அன்பானவர்களே கடந்த மாதம் முழுவதும் கர்த்தர் நம் சபை மக்களை பாதுகாத்து நடத்தி வந்தபடியால் கர்த்தருக்கு நன்றி செலுத்துவது மிகவும் உகந்ததாய் இருக்கிறது. கடந்த மாத ஆராதனைகள், ஊழியங்கள் எல்லாவற்றிலும் கர்த்தர் தம் நாம மகிமைக்கென்று செய்த வல்லமையுள்ள செயல்களுக்காக அவருக்கு நன்றி செலுத்துகிறேன்.
வேதவசனங்கள் அடிப்படையும் அன்றாட நிகழ்ச்சிகளையும் நாம் கவனித்து பார்த்தால் உலகத்தின் முடிவு அதிசீக்கிரம் என்பதை நாம் உணர்ந்து கொள்ளமுடியும். அப்போஸ்தலன் பவுல் எபிரேயருக்கு எழுதும்போது எபி 6:1,2-ல் மனந்திரும்புதல், தேவன் பேரில் வைக்கும் விசுவாசம்.... நியாயதீர்ப்பு....இவைகள் ஒரு கிறிஸ்தவனிடம் காணப்படவேண்டியது என்றும் இவைகள் செத்து போன கிரியைகள். இவைகளை மீண்டும் புதுப்பித்து கொள்ள அறிவுறுத்தாமல் பூரண புருஷராக கடந்து போகவேண்டுமென்று அறிவுறுத்துகிறார். எபே.4:11 ல் கூட இதை நாம் கண்டுகொள்ளலாம்.
ஆகவே இந்நாட்களில் கிழ்காணும் காரியங்களில் ஜாக்கிரதையுடனிருக்க வேண்டுமென்று அறிவுறுத்துகிறேன்

## விழித்திருங்கள்

மத் 24:42-ன் படி உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையில் வாருவார் என்று நீங்கள் அறியாதபடியால் விழித்துருங்கள். கர்த்தர் வரும் நாளையோ நாழிகையோ நாம் அறியாதபடியால் எப்பொழுதும் அவர் வருகைக்காக ஜாக்கிரதையுள்ளவர்களாக இருக்கவேண்டும். மத் 25:10-ல் 10கன்னிகைகள் மனவாளனை வரவேற்க சென்றார்கள் ஆனால் அதில் 5 பேர் மாத்திரம் ஜாக்கிரதையாய் தங்கள் தீவட்டிகளோடு எண்ணையையும் கொண்டு சென்றார்கள். நேரம் வந்தபோது தங்கள் தீவட்டிகளை ஏற்றி ஒளியை உண்டாக்கி மணவாளனோடு கலியாண வீட்டுக்குள் பிரவேசித்தார்கள்.

## பரிசுத்தமாயிருங்கள்

1 பேதுரு 1:13-16 சொல்கிறபடி தெளிந்தபுத்தியுள்ளவர்களாய், கிருபையின்மேல் நம்பிக்கை வைத்து, முன்னே செய்து வந்த இச்சைகளின்படி நடவாமல் உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல் நடக்கை, பேச்சு எல்லாவற்றிலும் பரிசுத்தம் காணப்படவேண்டும்.

## விசுவாசத்தில் பூரணம்:

1யோவான் 5:14-15 நாம் எதையாகிலும்..... கேட்டவைகளை பெற்றுக்கொண்டோம் என்று அறிந்து கொள்ளவேண்டும் யோவான் 4:46-53 ஐ வாசித்து பார்த்தால் மரணதருவாயிலிருக்கிற பிள்ளைக்காக ஜெபிக்க இயேசுவை அழைக்க வந்தான். ஆனால் இயேசு அவனிடம் (50-ம் வசனம்)நீ போகலாம் உன் மகன் பிழைத்திருக்கிறான் என்று சொன்ன மாத்திரத்தில் விசுவாசத்தோடு திரும்பிபோனான். 52-ம் வசனத்தில் இயேசு திருவாய் மலர்ந்த அதேநேரம் அவன் மகன் சொஸ்தமானான் என்று சாட்சி சொல்வதை பார்க்கிறோம். நாமும் இயேசுவின் மேலும் அவருடைய வார்த்தையிலும் பூரண விசுவாசம் வைக்கவேண்டும்.

## அன்பிலே பூரணபடவேண்டும்:

1யோவான் 4:18 பூரண அன்பு பயத்தை புறம்பே தள்ளும். பரிபூரணமான தேவ அன்பு நம் இருதயத்தில் நிறைந்திருக்குமானால் மாத்திரமே நாம் மற்றவரிடத்திலும் அன்பு பாரட்டமுடியும். இயேசுகிறிஸ்துவும் அதைதான் சொன்னார் லூக்கா 6:36 உங்களை சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகித்தால் பலன் என்ன? துரோகிகளும் அவ்வாறு செய்கிறார்களே. மற்றவர்களை குற்றவாளியென்று தீர்க்காதிருங்கள். வீண் சம்பாஷணைகளை தவீர்த்து விடுங்கள். 1கொரி 15:33 ன்படி ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கங்களை கெடுக்கும். ஆகாத பேச்சுக்கள், தகாத சம்பாஷணைகளை பேசுகிறவர்களை ஒழுக்கம் கெட்டவர்கள் என்று வேதம் சொல்கிறது. நல்ல ஒழுக்கம் உள்ளவர்களென்று மற்றவர்கள் சொல்லும்படியாக சமயம் வாய்க்கும் போதெல்லாம் மற்றவர்களோடு சம்பாஷிக்கும் போது கர்த்தரையும் அவர் வல்லமையையும் பற்றி பேசுங்கள் அவர்களை இரட்சிப்புக்கு நேராக வழி நடத்தவும் நீங்கள் பெற்றிருக்கிற இரட்சிப்பின் சந்தோசம் இன்னும் விருத்தியடையவும் வாய்ப்பு உண்டு.

இறுதியாக 1தீமோத் 6:12 நீயோ தேவ மனுஷனே சாந்த குணத்தையும் அடையும்படி நாடு.

கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

இந்த மாத ஊழியங்களுக்காக, ஆராதனைகளுக்காக, ஊழியம் செய்கிறவர்களுக்காக ஜெபித்துகொள்ளுங்கள்.

இவண்
கர்த்தரின் பணியில்

அன்பு சகோதரன் A.ஜஸ்டின் சுந்துரராஜ்

# தேவ செய்தி

## மாயையை விட்டு விலகுவோம்

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளே தேவனின் பெரிதான கிருபையினாலும் அன்பினாலும் உங்களை நாங்கள் வாழ்த்துகிறோம்.

புது உடன் படிக்கையின் ஊழியக்காரராயிருக்கும்படி. அவரே எங்களை தகுதியுள்ளவர்களாக்கினார். அந்த உடன் படிக்கை எழுத்திற்குறியதாயிராமல் ஆவிக்குறியதாயிருக்கிறது எழுத்து கொல்லுகிறது ஆவியோ உயிர்ப்பிக்கிறது 2கொரி-3:6

இந்த வசனத்தை ஒருமுறை நன்றாக படித்து மனதில் பதிய வைத்துக்கொண்டு மேற்க்கொண்டு தொடருவோமானால் நம் தியானத்திற்கு ஏதுவாக இருக்கும். இந்த 2கொரி மூன்றாவது அதிகாரத்தை நாம் முழுவதும் படித்தோமானால் சில காரியங்களை நாம் அறிந்துக்கொள்ளலாம். இதில் பழைய உடன்படிக்கை புதிய உடன்படிக்கையில் பரிசுத்த ஆவியானவர் என்ன செய்தார் இன்னும் ஊழியத்தை குறித்து நிறைய காரியங்களை தெரிந்துக்கொள்ளலாம். வசனம் இப்படி இருக்க புற ஜாதிகளுக்கு இயேசுவை குறித்து சுவிஷேசம் அறிவிக்க வேண்டிய நாம் இப்பொழுது உள்ளுக்குள்ளே அறிவிக்க வேண்டியுள்ளது கிறிஸ்தவர்கள் என்று சொல்கிற நமக்குதான்.இரட்சிக்கப்பட்டோம் என்கிற நமக்கு,அபிஷேகம் பெற்றோம் என்கிற நமக்குதான் பரலோக ராஜ்ஜியத்தை குறித்தும், உடன்படிக்கையை குறித்தும் இரட்சிப்பு நிறைவேற என்ன செய்ய வேண்டும் என்று சுவிஷேசம் சொல்லவேண்டும். காரணம் இந்நாள் கிறிஸ்தவர்கள் ஞானஸ்நானம் என்ற கோட்டோடு நின்று விட்டார்கள் அதற்கு மேலே ஏறவில்லை சபைகளும் சம்பிரதாயம் என்ற பெயரில் ஒரு கோட்பாட்டுக்கு மேல் செல்ல முடியாமல் சபையை நடத்த வேண்டும் என்ற ஒரு கட்டாயத்தோடு சபையை நடத்திக் கொண்டு செல்கிறது. எல்லா சபைகளும் விசுவாசிகளை கூட்டவேண்டும் கூட்டத்தை கூட்டி அதிக விசுவாசிகள் உள்ள சபை என்று பெருமைபாராட்டிக் கொள்ள வேண்டும்,என்று நினைக்கிறது சபைகள் நிறைந்து வழிகிறது உண்மைதான்,ஆனால் நாமோ இயேசு சொன்ன வார்த்தைகளை அவர் நமக்கு கொடுத்த உடன்படிக்கைகளை மறந்து அல்லது உதாசீனபடுத்தி கொண்டு வருகிறோம். மத்தேயு 28:19,20 வசனங்கள் மிக தெளிவாக கூறுகிறது இதில் 20வது வசனம் சொல்கிறது நான் கட்டளை இட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள் இப்படி நீங்கள் இருந்தால் தான் நான் உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களோடு கூட இருப்பேன் என்று சொல்கிறார்

எல்லா சபைகளும் உடன்படிக்கையின் படி சீஷர்களாக்க முன்வரவில்லை மாறாக கூட்டம் நிரம்பி வழிய வேண்டும் என்றும், அதில் மேன்மை பாரட்டிக் கொள்ளவேண்டும் என்று இயேசுவின் திட்டங்களை செயல்படுத்துகிறார்கள். வசனம் மத்தேயு 23: 13.மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, மனுஷர் பிரவேசியாதபடி பரலோகராஜ்யத்தைப் பூட்டிப்போடுகிறீர்கள்ளூ நீங்கள் அதில் பிரவேசிக்கிறதுமில்லை, பிரவேசிக்கப் போகிறவர்களைப் பிரவேசிக்க விடுகிறதுமில்லை.14. மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, பார்வைக்காக நீண்ட ஜெபம்பண்ணி, விதவைகளின் வீடுகளைப் பட்சித்துப்போடுகிறீர்கள் இதினிமித்தம் அதிக ஆக்கினையை அடைவீர்கள்15. மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, ஒருவனை உங்கள் மார்க்கத்தானாக்கும்படி சமுத்திரத்தையும் பூமியையும் சுற்றித்திரிகிறீர்கள், அவன் உங்கள் மார்க்கத்தானான போது அவனை உங்களிலும் இரட்டிப்பாய் நரகத்தின் மகனாக்குகிறீர்கள். மத்தேயு 23:13-15(முடிந்தால் 23 வது அதிகாரம் முழுவதும் படிக்கவும்)இது எல்லோரையும் எச்சரிக்கிறது, ஆகவே அவரது கட்டளைகளை உடன்படிக்கைகளை சுமந்து வாழ பிரியப்படுவோம் அப்போது தான் உலகத்தின் முடிவு பரியந்தம் நம்மோடிருப்பார்.

மேலே சொன்ன வசனம் 2கொரிந்தியர் 3:6ன் படி நாம் தியானிப்போமானால் பழைய உடன்படிக்கையின் கீழ் உள்ள அழைப்பை காட்டிலும் புதிய உடன்படிக்கையின் ஊழிய அழைப்பு ஓர் மகாமேன்மையான அழைப்பாகும், பழைய உடன்படிக்கையின் கீழ் வாழ்ந்த தேவ ஊழியர்கள் தேவமக்கள் மோசே, எலியா, யோவான்ஸ்நானகன் போன்றவர்கள் கற்பனைகளை பின்பற்றி தேவனுக்கு ஊழியம் செய்தார்கள் ஆனால் நாமோ ஓர் மாதிரியை (இயேசு கிறிஸ்துவை) பின்பற்றி தேவனுக்கு ஊழியம் செய்ய அழைக்கப்பட்டு இருக்கின்றோம். ஓர் தேவனுடைய ஊழியக்காரன் எப்படி பட்டவனாக இருக்கவேண்டும் எவ்வாறு ஊழியம் செய்ய வேண்டும் என்பதற்கு இயேசு கிறிஸ்து ஓர் மாதிரியாக நமக்கு இருக்கிறார்.

பழைய உடன்படிக்கையின் ஊழியர்களாயிருந்த மோசே, யோசுவா, சிம்சோன்,தாவீது போன்றவர்கள் இஸ்ரவேலை ஆளுவதற்குறிய அதிகாரத்தையும், தங்களுக்குண்டாயிருந்த மானிட எதிரிகளை மேற்கொள்வதற்குறிய அதிகாரத்தையும் பெற்றிருந்தார்கள். ஆனால் புதிய உடன்படிக்கையின் தேவனுடைய ஊழியர்களோ மற்றவர்களை திவ்ய சுபாவத்தில் (நித்திய ஜீவனில்)பங்கு பெறும்படி நடத்தி அவர்கள் மாமிசத்தில் உள்ள இச்சைகளை மேற்கொள்ள வழி நடத்தும் அதிகாரத்தை பெற்றிருக்கிறார்கள்.

இவ்வாறு தன் வாழ்வின் எல்லாச் சூழ்நிலைகளிலும் மாதிரியை அதாவது இயேசு கிறிஸ்துவை பின்பற்றினால் கண்டிப்பாக நித்திய ஜீவனில் அல்லது திவ்ய சுபாவத்தில் நாமும் பங்கு பெற முடியும் வசனம் யோவான் 17:2 ல் படித்தோமானால் நித்திய ஜீவனை குறித்து தெரிந்து கொள்ளலாம். இன்று திரளான கிறிஸ்துவ போதகர்களும், தலைவர்களும், பழைய உடன்படிக்கையின் தேவ ஊழியர்களைப் போல ஜனங்களை ஆளுகை செய்கிறார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவும், அப்போஸ்தலர்களும் எல்லா மனிதர்களுக்கும் வேலைக்காரர்களாய் இருந்தார்கள் என்று வேதத்தை படிக்கும்போது நாம் தெரிந்து கொள்ளலாம். இந்த சத்தியத்தின் படி நீங்கள் உங்களை சற்று சோதித்துப் பாருங்கள் . நீங்கள் பழைய உடன்படிக்கையின் ஜீவியத்தில் வாழ்ந்து கொண்டு இருக்கிறீர்களா அல்லது புதிய உடன் படிக்கையின் ஜீவியத்தில் வாழ்ந்து வருகிறீர்களா சோதனை செய்து பாருங்கள்.

பழைய உடன்படிக்கையின் கீழ் அபிஷேகிக்கப்பட்ட சிம்சோனுக்கும், புதிய உடன்படிக்கையின் கீழ் அபிஷேகிக்கப்பட்ட பவுலுக்கும் இடையில் ஏராளமான வித்தியாசங்கள் இருக்கின்றன. சிம்சோன் ஆவியின் வல்லமை பெற்று வெளியிலிருந்த சிங்கங்களை வென்றான் ஆனால் புதிய உடன் படிக்கையின் கீழ் பவுலோ ஆவியின் வல்லமையை பெற்று சிம்சோன் வென்றிட முடியாதிருந்த தன் சொந்த மாமிசத்திலே குடி கொண்டிருந்த பாலிய இச்சை போன்ற சிங்கங்களை ஆவியின் வல்லமையினால் வென்றார்! இந்த இருவரில் நாம் யாரை போன்று ஆவியை பெற வேண்டும் என சிந்தித்துப்பாருங்கள் பழைய உடன்படிக்கையின் கீழ் சிம்சோனா? அல்லது புதிய உடன்படிக்கையின் கீழ் பவுலா? முடிவு எடுத்து கொள்ளுங்கள்

பழைய உடன்படிக்கையின் தேவ ஊழியர்கள் தேவனுடைய சமூகத்திற்கு முன்பாக நின்று, தேவன் சொல்ல விரும்பியதைக்கேட்டு அல்லது தேவன் சொல்வதை கேட்டு மற்றவர்களுக்குச்சொன்னார்கள். ஆனால் புதிய உடன் படிக்கையில் இது போன்ற செயல்கள் போதாது என்றும் மேலும் தேவனை சேவிக்கும் ஊழியர்கள் உபத்திரங்களுக்குள்ளும், பாடுகளுக்குள்ளும் உட்பட்டு அவைகளை ஜெயிப்பதற்கு உதவும் தேவகிருபையை அனுபவ பூர்வமாய் பெற்றுக்கொண்டு அல்லது அதை அனுபவித்து பின்புதான் தங்கள் பெற்றுகொண்டதை இந்த மாதிரியை மற்றவர்களும் பின்பற்றும்படி இதைப்பற்றி கூறவேண்டும். ஆகவே தான் இந்த பழைய உடன்படிக்கை ஊழியத்தைவிட புதிய உடன்படிக்கை ஊழியம் அதிகமேன்மையாக இருப்பதற்கு மேலே சொன்ன எல்லா கூற்றுகளை படித்து புரிந்து கொண்டோமானால் உண்மை நிலை புரிந்துவிடும்.

இதற்காக நாம் ஒரு வேத பள்ளிக்கு சென்று இதன் மூலமாய் ஒரு புதிய உடன்படிக்கையின் ஊழியனாக மாற முடியாது. காரணம் வேதத்தில் நாம் காணும் எல்லா அப்போஸ்தலனும், தீர்க்கதரிசியும் வேதபள்ளிக்கு சென்று கற்றுவந்ததே இல்லை.

நம் வாழ்க்கையின் பல்வேறு சூழ்நிலைகளில் பரிசுத்த ஆவியானவர் வேதத்தின் வெளிச்சத்தை அல்லது விளக்கங்களை நமக்கு போதிக்கின்றார். இவ்வகையான விளக்கங்களைத்தான் அப்போஸ்தலர்களும் மற்ற தீர்க்கதரிசிகளும் கற்றுக்கொண்டனர். தற்காலத்தில் கூட நாம் காணும் எந்த உண்மையான ஊழியர்களும் இதைத்தான் தெரிந்து கொண்டு தங்கள் பரிசுத்த வாழ்க்கையை தொடருகிறார்கள் இதை நாமும் கற்றுக்கொண்டால் மாத்திரமே மற்றவர்களையும் நித்திய ஜீவனை சுதந்தரிக்கும்படி நடத்திடமுடியும்.

ஆகவே புதிய உடன் படிக்கையின் ஊழியர்கள் அல்லது புதிய உடன்படிக்கையின்படி ஜீவிப்போர்கள் பிறருக்கு இயேசுவின் குட்டி முன்னோடிகளாகவே இருக்கவேண்டும் அப்போதுதான் மற்றவர்களுக்கு நாம் உண்மையான மேய்ப்பர்களாய் இருந்திடமுடியும். இதற்கு மாறாக பணத்தையோ அல்லது கிறிஸ்துவத்தை சீர்குலைத்துக்கொண்டிருக்கும் மனுஷீக கனத்தையோ தேடி ஓடுவோமானால் பணத்துக்கும் மனுஷீக கனத்துக்கும் கூலிக்காரர்களாகத்தான் இருக்கமுடியும். பேதுரு மூப்பர்களுக்கு எழுதும்போது மந்தைகளுக்கு மாதிரியாக இருங்கள் (குட்டி முன்னோடிகளாக இருங்கள்) என்று 1பேதுரு 5:3ல் எழுதியுள்ளார் இதே போல் பவுல் தீமோத்தேயுக்கு எழுதும்போது நீ வார்த்தையிலும், நடத்தையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும்,விசுவாசிகளுக்கு மாதிரியாரு என்று 1தீமோ4:12ல் புத்தி கூறியிருக்கிறார். ஆகவே நம் இரட்சிப்பு நிறைவேற நாம் பயத்தோடும், நடுக்கத்தோடும் பிரயாசப்படுங்கள் என்று பிலிப்பியர் 2:12ல் கூறியதை நாமும் நம் வாழ்வில் இதை சுமந்து வாழ்வோமானால் நாமும் புதிய உடன் படிக்கையின் மக்களாய் அல்லது ஊழியராக 1கொரிந்தியர்3:6 ன் படி கர்த்தரிடத்தில் திரும்புவோமாக!

கர்த்தர் நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக

இப்படிக்கு

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரர்கள்

**Mina Abdulla Camp Brothers**

## 2011 ஆம் ஆண்டு சபையின் வாக்குத்தத்தம்

**கர்த்தர் தமது ஜனத்திற்குப் பெலன்கொடுப்பார்**

**கர்த்தர் தமது ஜனத்திற்குச் சமாதானம் அருளி,**

**அவர்களை ஆசீர்வதிப்பார் (சங்கீதம் 29:11)**

# ஊழியர்கள் பகுதி

## குறைகளில் இருந்து கற்றுக்கொள்வோம்

**கர்த்தருடைய ஊழியக்காரர்கள் ஒன்று கூடி வருவது எவ்வளவு அருமையானது! நமக்கு புதிய ஏற்பாட்டின் ஊழியக்காரர்களை பின்பற்றி நடப்பதுதான் நல்ல ஊழியம். இயேசு கிறிஸ்து தமது சீஷர்களுக்குக் கொடுத்த ஒரு சில செய்திகள் இனிமையற்றதாக இருக்கலாம், நமது இருதயத்தை அறுக்ககூடியதாக இருக்கலாம். ஆனாலும் நமக்கு சில நேரங்களிலே அறுவை சிகிச்சை தேவைபடுகிறது. லூக்கா 9ஆம் அதிகாரத்தில் ஊழியக்காரர்களிடத்தில் காணப்பட்ட குறைகளும் அவைகளை இயேசு கிறிஸ்து சீர்படுத்தின காரியங்களையும் நாம் கவனிக்க வேண்டும்.**

**காணப்பட்ட குறைகள்..**

**1. லூக்கா 9:12 (நடுப்பகுதி) அவர்களை அனுப்பி விட வேண்டும்**

**2. லூக்கா 9:32 பேதுருவும் அவனோடு இருந்தவர்களும் நித்திரை மயக்கமாயிருந்தார்கள்**

**3. லூக்கா 9:40. அவர்களால் கூடாமற்போயிற்று**

**4. லூக்கா 9:46 தங்களில் எவன் பெரியவன் என்ற வாக்குவாதம் உண்டாயிற்று**

**5. லூக்கா 9:49 அவனை தடுத்தோம்**

**6. லூக்கா 9:54 வானத்திலிருந்து அக்கினி இறங்கி அவர்களை அழிக்கும்படிக்கு நாங்கள் கட்டளையிட உமக்கு சித்தமா என்றார்கள்.**

**7. லூக்கா 9:59 முதலில் நான் போய் என் தகப்பனை அடக்கம் பண்ண வேண்டும் .**

**லூக்கா 9ஆம் அதிகாரத்தில் தமது ஊழியக்காரரிடத்தில் நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கண்ட சில குறைகளில் முதலாவது குறை லூக்கா 9 :12ல் காணலாம்**

## பொறுப்பிலிருந்து நழுவுதல்

**சீஷர்களின் முதலாவது குறை பொறுப்பற்ற தன்மை. இயேசு செல்கிற இடங்களிலெல்லாம் எப்பொழுதுமே பெருங்கூட்டம் செல்லும். இயேசு கிறிஸ்துவின் வல்லமையுள்ள வார்த்தைகளை கேட்கும்படி ஆவலுடன் செல்லும் கூட்டம் அது. ஒரு நாள் இயேசு வனாந்திரமான இடத்தில் தேவனுடைய ராஜ்ஜியத்தைகுறித்து பிரசங்கம் பண்ணினார் அவர், காலை முதல் மாலை வரை உபதேசம் பண்ணிக் கொண்டிருக்கலாம். ஜனங்களும் ஒன்றும் புசியாமல், ஒன்றும் குடியாமல் பட்டினியோடிருந்தார்கள் ஏறக்குறைய ஐயாயிரத்திற்கு மேற்பட்டவர்கள் இருந்தார்கள் மிகவும் சோர்ந்து, களைத்தும் இருந்தார்கள் நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தாலும். நீண்ட நேரம் கேட்டுக் கொண்டிருந்தாலும் களைப்பு வரும், இயேசு அவர்களின் சோர்வை கண்டு அவர்களுக்கு ஆகாரம் கொடுக்க விரும்பினார், சீஷர்களோ ஜனங்களை அனுப்பிவிட வேண்டும் என்றார்கள், சீஷர்கள் தங்கள் பொறுப்புகளிலிருந்து எப்படியாவது நழுவி விட வேண்டும் என்று எண்ணினார்கள்**

**(நன்றி இயேசு ஜீவிக்கிறார் ஊழியம்)**

# 2011 ஜூலை மாத வேத வினாவிற்கான பதில்கள். 

1. மோசே - அப்போஸ்தலர் 7: 20
2. கொர்நேலியு - அப்போஸ்தலர் 7: 20
3. 120 சீஷர்கள் - அப்போஸ்தலர் 1: 12-15
4. அப்போஸ்தலர் 7: 20
5. அப்பொல்லோ - அப்போஸ்தலர் 18: 24
6. மூப்பர்களை - அப்போஸ்தலர் 14: 23
7. ஸ்தேவான் - அப்போஸ்தலர் 6: 15
8. பிலிப்பு - அப்போஸ்தலர் 8: 40
9. பவுல் - பர்னபா - அப்போஸ்தலர் 15: 35
10. தீமோத்தேயு - அப்போஸ்தலர் 16 : 1
11. லீதியாள் - அப்போஸ்தலர் 16: 14
12. அனனியா - அப்போஸ்தலர் 23 : 2
13. கிறிஸ்பு - அப்போஸ்தலர் 18 : 8
14. சொஸ்தனே - அப்போஸ்தலர் 18 : 17
15. சவுல் (பவுல்) - அப்போஸ்தலர் 22: 19-20

## 2011 ஜூலை மாத வேத வினாவிற்கு விடை எழுதியவர்கள்

சகோதரி. சித்ரா ஞான சுரேஷ்
சகோதரி. மரகதம் ஸ்டீஃபன்
சகோதரி. ஆலிஸ் மீரா பிரபு
சகோதரி. லதா கிறிஸ்டோபர்
சகோதரி. அனுஷுயா டேவிட்சன்
சகோதரி. ஜீனா சதீஷ்குமார்
சகோதரி. பத்மினி
சகோதரி. ஜான்ஸி அற்புதராஜ்
சகோதரி. பிங்கி ஷாம்
சகோதரி. எஸ்தர் விசு
சகோதரி. சாந்தி சீனிவாசன்
சகோதரி. சுகந்தி தம்புகுமார்
சகோதரி. மெர்லின் அஜீத்
சகோதரி. குமுதினி வில்ஸன்
சகோதரி. தயா இயேசுரெத்தினம்
சகோதரி. விக்டோரியா ராஜன்
சகோதரி. ஹேனா எசேக்கியல்

சகோதரர். பாபு
சகோதரர். ராஜாசிங்
சகோதரர். ஜான்
சகோதரர். ஜான்ஸன்
சகோதரர். ரெமி ஜார்ஜ்
சகோதரர். ஆரோக்கியராஜ்

# 2011 ஆகஸ்டு மாத வேத வினா பகுதி

1. பாவமுள்ள ஜாதியை பற்றி கூறின தீர்க்கதரிசி யார்?
2. நீதியுள்ள ஜாதியை பற்றி எழுதினவர் யார்?
3. 'வலையிலே சிக்குண்ட கலைமானை பற்றி' வாசிப்பதெங்கே ?
4. குலைக்க மாட்டாத ஊமையான நாய்கள் யார் ?
5. 'எனக்கு ஆறுதல் சொல்ல வராதேயுங்கள்' என்றது யார் ?
6. கொந்தலைக்கும் கடல் அலைகள் யார் ?
7. வஸ்த்ரமில்லாமலும் வெறுங்காலுமாய் நடந்த தீர்க்கதரிசி யார்??
8. யாருடைய நெற்றி வெண்கலமாயிருந்தது ?
9. கர்த்தர் நீதி செய்கிற தேவன் என்றது யார் ?
10. எந்த பட்டினத்தின் பிரபுக்கள் மூடர்கள்?
11. எனக்கு பிரியமானதெல்லாம் நிறைவேற்றுவேன் - யார்?
12. சேனைகளின் கர்த்தருடைய திராட்சை தோட்டம் எது ?
13. மாயையின் கயிறுகளால் அக்கிரமத்தை இழுத்துக் கொண்டு வந்தவர்கள் யார் ?
14. 'ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனை பெறுவாள்' என்ற தீர்க்கதரிசி யார் ?
15. பர்வதங்களை தராசால் நிறுத்தியவர் யார் ?

விடைகளை வருகின்ற **19-8-2011** க்குள் சபையின் செயலாளரிடம் நேரில் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். விடைகளை ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகத்தில் தேடி கண்டுபிடிக்கவும்

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதர சகோதரிகளுக்கு தாங்கள் இந்திய தேச மிஷனரிகளை தாங்கும் ஊழியத்திற்கு பொருத்தனை செய்திருந்தால், தங்களது காணிக்கைகளை சகோ.ஆரோக்கியதாஸ் (99870126) அவர்களிடத்திலும். திக்கற்ற பிள்ளைகளின் ஊழியத்திற்கென்று பொருத்தனை செய்திருந்தால், தங்களது காணிக்கைகளை சகோ. தாமஸ் (66810423) அவர்களிடத்திலும், போக்குவரத்து ஊழியத்துக்கென்று கொடுக்கிறவர்கள் தங்கள் காணிக்கைகளை சகோ. ஸ்டீஃபன் (65868048) அவர்களிடத்திலும் கொடுத்து, ஊழியத்தை தாங்க அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்

10 கர்த்தர் உன் களஞ்சியங்களிலும், நீ கைபிடும் எல்லா வேலையிலும் உனக்கு ஆசீர்வாதம் கட்டளையிடுவார்: உன் தேவனாகிய கர்த்தர்....... உன்னை ஆசீர்வதிப்பார்.

உபா 28:8

## இந்த மாதம் பிறந்த நாளைக் சிறப்பிக்கிறவர்கள்

செல்வன் : ஸ்டெஃபன்
செல்வன் : ஜோப் அப்ரகாம்
செல்வன் : செல்வின் மார்டீன்
செல்வன் : லோகேஸ் டேவிட்
செல்வன் : கிதியோன்
செல்வன் : எரிக் நாதன்
செல்வன் : பால் தன்ராஜ்

செல்வி : வனிதா புருஷோத்தமன்
செல்வி : புஷ்பா ராஜன்
செல்வி : நிஷா ஜெயசீலன்
செல்வி : காயத்திரி கொமையன்
செல்வி : S P அனிஷா

சகோதரி.மில்லி ஜஸ்டிஸ்
சகோதரி. ஜரீன் பிரீட்டா
சகோதரி.எமிமாள்
சகோதரி.மதி மீரியம்
சகோதரி. டெய்ஸி ஸ்ரீனா
சகோதரி.மெர்சி தயா இயேசுரெத்தினம்
சகோதரி. வெற்றி செல்வி புருஷோத்தமன்
சகோதரி.சினேகலதா கிறிஸ்டோபர்
சகோதரி.சௌமியா

சகோ. ஜெபத்துரை
சகோ. கிறிஸ்டோபர் தேவராஜ்
சகோ. சதீஷ் குமார்
சகோ. அருண் இம்மானுவேல்
சகோ. எசேக்கியேல் ஞானதாஸ்
சகோ. ஜெயசந்திரன்
சகோ. ஆரோக்கியதாஸ்
சகோ. வேளாங்கன்னி
சகோ. வில்சன் செல்லையா
சகோ. அற்புதராஜ்

......கர்த்தர் உனக்குத் தமது நல்ல பொக்கிஷ சாலையாகிய வானத்தைத் திறப்பார்........ உபா 28:1

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

திருமதி-திரு.பால்ராஜ் ஆமோஸ்
திருமதி-திரு. விஜய் இம்மானுவேல்
திருமதி-திரு. பால் புருஷோத்தமன்
திருமதி-திரு. ஜெய்சங்கர்
திருமதி-திரு. சிவக்குமார்
திருமதி-திரு. K. ஆரோக்கியதாஸ்
திருமதி-திரு. ராஜாசிங்

# 2011 ஆகஸ்டு மாத ஆலய ஆராதனை

**வெள்ளி ஆராதனை நேரம் மாலை 4 -10 முதல் 5-45 வரை**

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 5-08-2011 | சகோ. ஐசக் துரை | சகோ. ரவிச்சந்திரன் |
| 12-08-2011 | சகோ. ஜெயசேகர் | சகோ.பால் ஜெகநாதன் |
| 19-08-2011 | Rev. எலிசா அன்பு (அருப்பு கோட்டை) | |
| 26-08-2011 | சகோ. ரவிச்சந்திரன் | சகோ. ஸ்டீ:ஃபன் |

**ஞாயிறு ஆராதனை நேரம் மாலை 5-00 முதல் 6-15 வரை**

| நாள் | செய்தி |
|---|---|
| 7-08-2011 | சகோ. சுகுமார் |
| 14-08-2011 | சகோ. ஜெயசேகர் |
| 21-08-2011 | சகோ. சைமன் |
| 28-08-2011 | சகோ. F. தாமஸ் |

**சகோதரிகள் ஐக்கிய கூடுகை -**
**நாள் 10-08-2011 நேரம் : மாலை 6:30 மணிக்கு**
**இடம் : சகோதரி. சௌமியா சுனில் அவர்கள் இல்லம் (மங்கா:ஃப்)**

**முழு இரவு ஜெபம் -11-08-2011**
**(இடம்) பரிசுத்த பவுல் ஆலயம், இரவு 11-00 மணி முதல்**
**அதிகாலை 3 -00 மணி வரை,**

**வாலிபர்கள் ஐக்கிய கூடுகை - நாள் 26-08-2011 நேரம் : மாலை 6:30 மணிக்கு**
**இடம் : சகோதரர் ஸ்டீ:ஃபன் அவர்கள் இல்லம் அபுஹலிபா**
**(தானியேல் புத்தகத்தில் இருந்து வேதவினா போட்டி)**

# குடும்ப பகுதி

## இயேசுவை மையமாகக் கொண்ட குடும்பம்

அவள் அவன் வீட்டோரங்களில் கனிதரும் திராட்ச்சை செடி திராட்சைரசம் சந்தோஷம் தரும். அவள் அந்த வீட்டின் மகிழ்ச்சி. புருஷனுடைய இருதயம் அவளை நம்புகிறது, ஏழைகள் அவளை வாழ்த்துகிறார்கள், அவள் பிள்ளைகள் தன் தாயை நினைத்து மகிழ்கிறார்கள். அவளை எங்கள் அம்மா பாக்கியவதி என்கிறார்கள். புருஷன் அவளைக் குணசாலி என்று வாழ்த்துகிறார். அவளும் தன்வருங்காலத்தை குறித்து மகிழ்சியாய் இருக்கிறாள்.

அவர் பிள்ளைகள் அவரது பந்தியை சுற்றிலும் ஒளிவ மரக்கன்றுகளை போல செழித்து வளருகிறார்கள். அவரவர்களுக்குறிய பருவம் வரும் வரை அப்பாவின், அம்மாவின் அனைப்பில் வளருகிறார்கள். அப்பாவுடைய விசுவாசம் அம்மாவுடைய பரிசுத்தத்திலும் வளருகிறார்கள், ஒருவரும் வேசிக் கள்ளனாகவோ துன்மார்கனாகவோ வாழவில்லை ஏற்ற காலத்தில் கர்த்தரால் இரட்சிக்கப்பட்டு, திருமுழுக்கு பெற்று, அப்பாவுடனும் அம்மாவுடனும், குடும்ப ஜெபத்திலும், ஆராதனையிலும், ஊழியத்திலும் பங்கெடுக்கிறார்கள்,ஒரே திருவிருந்து பந்தி யில் பங்கெடுக்கிறார்கள், வீதியிலே போகும் போது அவருடைய பிள்ளைகளை பற்றி புகழ்ந்து பேசுகிறார்கள், அவரது முகம் பிரகாசிக்கிறது. ஆகவேதான் அவர்களை ஒளிவமரக்கன்று என்று வேதம் சொல்லுகிறது. உன் பந்தியை சுற்றிலும் ஒளிவமரக்கன்றுகள், இந்த குடும்பம் உண்மையாகவே ஒரு மாதிரி குடும்பம்தான். இந்த மனிதன் பாக்கியவான்தான். இந்த மனைவி பாக்கியம் செய்தவள். அவர்கள் யார்? நீங்கள்தான். இந்த குடும்பத்தின் பிரயாசங்களை வைத்தியர்களும், வக்கீல்களும், காவல்துறையும், மதுக்கடையும், மருந்துக்கடையும், வஞ்சகக்காரனும், சாப்பிடமாட்டார்கள், இக்குடும்பத்தார் சாப்பிடுவார்கள், கர்த்தருடைய ஊழியம் அவர்களால் வளரும், ஏழைகள் முகம் இவர்களால் பிரகாசிக்கும்,

அவன் காண்பது......... எருசலேமின் வாழ்வு, பிள்ளைகள் மாத்திரமல்ல, பிள்ளைகளின்பிள்ளைகளை - ஒரு சந்ததியை உத்தம குடும்பத்துக்கு ஒரு சந்ததியுண்டு. கர்த்தர் அந்த குடும்பத்தை மேய்ப்பார். அங்கே ஆசீர்வாதத்தையும், நன்மையையும், கர்த்தர் கட்டளையிடுவார். ஆமென்.!

நீங்கள் இந்த குடும்பத்தில் அங்கம்தானா? ஒரு வேளை நான் இப்பேற்பட்ட தலைவனாக இல்லையே என்று ஏங்குகறீர்களா? உங்கள் ஏக்கத்தை தீர்க்கும் கர்த்தர் இப்பொழுதே உங்கள் முன் நிற்கிறார்!

நான் இப்பேற்பட்ட மனைவியாக இல்லையே என்று என்னுகிறீர்களா? கலங்காதீர்கள் சகோதரிகளே! கர்த்தர் உங்கள் அருகில் இருக்கிறார், அவர் இப்பொழுதே உங்கள் பெலவீனத்திலே பெலனாக இருந்து உதவி செய்வார்.

**உங்கள் குடும்பத்தின் ஆசீர்வாதத் வசனத்தை நினைவுக்கு கொண்டு வருவோம் (11தீமோத்தேயு 1:12) நான் கொடுத்ததை அவர் இந்த நாள் வரைக்கும் காத்துக் கொள்ள வல்லவராய் இருக்கிறார். இந்த நேரத்திலேயே ஜெபத்துடனும் ஸ்தோத்திரத்திடனும், உங்களையும், உங்கள் குடும்பங்களையும், கர்த்தரிடத்தில் மனப்பூர்வமாய் ஒப்பு கொடுத்து ஜெபித்து ஸ்தோத்தரியுங்கள்.**

**அன்பான சகோதர சகோதரிகளே, உங்களுக்கு அன்பான வேண்டுகோள் எல்லோருக்கும் பெலவீனம் உண்டு, ஆனால் நம்முடைய பெலவீனங்களிலே நமக்கு உதவி செய்கிற தேவன் நம்மோடு உண்டு. அவரிடத்தில் நம்மையும் நம் பிள்ளைகளையும் ஒப்பு கொடுப்போம், நாம் வாசித்த அந்த மாதிரி குடும்ப தலைவனை போலவோ. தலைவியை போலவோ, பிள்ளைகளை போலவோ நாம் இல்லை என்றால். மனிதர்களுக்கு முன்பாக அல்ல, தேவனுக்கு முன்பாக அறிக்கையிடுவோம். கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பாராக!**

## நாம் ஜெபிப்போம்

**எங்கள் அன்புள்ள ஆண்டவரே, காலா காலங்களிலும் குடும்பங்களை கட்டி எழுப்பி பாதுகாத்தவரே, எங்கள் குடும்பத்தை ஒரு மாதிரி குடும்பமாக ஆக்க வாஞ்சித்து ஜெபிக்கிறேன், நான் என் பொறுப்பில் மிகவும் தவறியிருக்கிறேன், என்பதை ஒத்துக் கொள்கிறேன், அதற்காக கண்ணீருடன் மன்னிப்பு கேட்கிறேன், இன்று உம்மிடத்தில் ஒப்பு கொடுக்கும் என்னையும், என் குடும்பத்தையும், ஒரு மாதிரி குடும்பமாக அமைத்து காக்கிறதற்காக உம்மைத் துதிக்கிறேன், உம்மிடத்தில் ஒப்புவித்ததை நீர் அப்படியே செய்வீர், உம்மை துதிக்கிறேன்.**

**இயேசுவின் நாமத்தில் ஆமென் ஆமென்!**

**பிரியமானவர்களே! குடும்ப ஆசீர்வாத ஜெபம் நமக்காக நம் சபையில் ஆயத்தப்படுத்தி நமக்காகவே நடந்து கொண்டிருக்கிறது. நாமும் அதில் கலந்து கொண்டு தேவ ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளலாமே!. அது நம்முடைய பிள்ளைகளுக்கும் நம்முடைய கணவருக்கும், நம்முடைய மனைவிக்கும் ஆசீர்வாதமாக இருக்கும் அல்லவா!. இந்த ஆசீர்வாத கூடுகை செவ்வாய் மாலை 7:00 மணி முதல் 8:30 மணிவரையில் நடைபெறுகிறது, வந்து கலந்து கொள்ளுங்கள், தேவ ஆசீர்வாதத்தை அள்ளி செல்லுங்கள், இங்கு நாமே, நமக்காக, நம்முடைய குடும்பங்களுக்காக ஜெபிக்கிறோம் கூட்டு ஜெபத்திற்கு அவ்வளவு சக்தி உண்டு என்பதை நாம் அறிந்திருக்கிறபடி கர்த்தர் அந்த இடத்திலே அப்படி பட்ட அதிசயங்களை குடும்பங்களிலே செய்து கொண்டிருக்கிறார், நீங்களும் கலந்து கொண்டு ஆசீர்வாதத்தை பெற்று செல்லுங்கள், நன்றி**

(அடுத்து வரும் மாதங்களில் குடும்ப பகுதியில், கிறிஸ்தவ குடும்பம் பரலோகத்தின் வாசல் என்கிற தலைப்பில் நாம் மீண்டும் சந்திப்போம்! )

# சங்கீத புத்தகங்களை குறித்து தொடர்ந்து தியானிப்போம்

## சங்கீதம்

ஒரு விசுவாசி ஜெபத்தின் மூலமாகவும், துதியின் மூலமாகவும், இறைவனோடு ஐக்கிய படலாம் என்பதை இந்நூல் உறுதிப்படுத்துகிறது.

### தீர்க்கதரிசனமும், நிறைவேறுதலும்

(சங்கீதம் – தீர்க்கதரிசனம்) புதிய ஏற்பாடு (நிறைவேறுதல்)

சங்கீதம் 22:18 என் வஸ்திரங்களை தங்களுக்குள்ளே பங்கிட்டு சீட்டு போட்டுக் கொண்டார்கள்.

மத்தேயு : 27–35 அவரைச் சிலுவையில் அறைந்தபின்பு, அவர்கள் சீட்டுப்போட்டு அவருடைய வஸ்திரங்களைப் பங்கிட்டுக் கொண்டார்கள். என் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டு, என் உடையின்பேரில் சீட்டுப்போட்டார்கள் என்று தீர்க்கதரிசியால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது

சங்கீதம் 32:20 அவனுடைய எலும்புகளையெல்லாம் காப்பாற்றுகிறார். அவைகளில் ஒன்றும் முறிக்கப்டுவதில்லை

யோவான் 19:32–36 அவருடைய எலும்புகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை என்கிற வேதவாக்கியம் நிறைவேறும்படி இவைகள் நடந்தது.

சங்கீதம் 35:19 .முகாந்தரமில்லாமல் என்னைப் பகைக்கிறவர்கள்.

யோவான் 15:35 முகாந்தரமில்லாமல் என்னைப் பகைத்தார்கள் என்று அவர்களுடைய வேதத்தில் எழுதியிருக்கிற வாக்கியம் நிறைவேறும்படிக்கு இப்படியாயிற்று

சங்கீதம் 40:7–8 அப்பொழுது நான். இதோ, வருகிறேன், புஸ்தகச்சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறதுஎன் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்

எபி 10:7 அப்பொழுது நான்: தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ, வருகிறேன், புஸ்தகச்சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது என்று சொன்னேன் என்றார்.

சங்கீதம் 45:6 தேவனே, உமது சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது, உமது ராஜ்யத்தின் செங்கோல் நீதியுள்ள செங்கோலாயிருக்கிறது.

எபி 1:8 குமாரனை நோக்கி தேவனே, உம்முடைய சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது, உம்முடைய ராஜ்யத்தின் செங்கோல் நீதியுள்ள செங்கோலாயிருக்கிறது

(இன்னும் தொடரும்)

இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்ததற்கான காரணங்களை வேதத்தில் பல வசனங்கள் மூலமாக தெரிந்து கொள்ளலாம்.

1தீமோ 1:15 பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார். யோவான் 10:10 திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்.

மத்தேயு 20:28. அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார்.

லூக்கா 12:49. பூமியின்மேல் அக்கினியைப் போடவந்தேன், அது இப்பொழுதே பற்றி எரிய வேண்டுமென்று விரும்புகிறேன்.

யோவான் 18:37. சத்தியத்தைக்குறித்துச் சாட்சிகொடுக்க நான் பிறந்தேன், இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன்

யோவான் 3:16. தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.

இப்படி பல வசனங்களை வேதத்தில் பார்த்தாலும் முதன்மையான காரணத்தை தெரிந்து கொள்ளுங்கள். தேவன் தம்மை துதிக்க, ஆராதிக்க, மக்களுக்கு பணிவிடை செய்யவும், காக்கவும் தேவதூதர்களை படைத்தார். அவர்கள் தவறு செய்த பொழுது அவர்களை மன்னிக்கவே இல்லை.2 பேதுரு 2:4 ல் பாவஞ்செய்த தூதர்களைத் தேவன் தப்பவிடாமல், அந்தகாரச் சங்கிலிகளினாலே கட்டி நரகத்திலே தள்ளி நியாயத்தீர்ப்புக்கு வைக்கப்பட்டவர்களாக ஒப்புக்கொடுத்து இதை யூதா 1:6 லும் வாசிக்கலாம். ஆனால் தம்மால் உலகத்தில் முதன்முதலில் படைக்கப்பட்ட மனிதனாகிய ஆதாம் பாவம் செய்தபொழுது, அவனை ஏதேன் தோட்டத்தை விட்டு விரட்டினாலும் அவனை மன்னிக்க சித்தமானார். ஆதி3:21 ஆதாமுக்கும் அவன் மனைவிக்கும் தோல் உடைகளை உண்டாக்கி அவர்களுக்கு உடுத்தினார்.இது அவருடைய மனதுருக்கத்தை காட்டுகிறது.

போலீஸில் ஒருவர் மாட்டிக்கொண்டால் அவரை விடுவிக்க ஜாமீன் கொடுக்கவேண்டும். ஜாமீன் கொடுப்பவர் நல்லவராக இருக்கவேண்டும். அந்த ஊரைச்சேர்ந்தவராக இருக்கவேண்டும். முன்பணம் கட்டி ஜாமீனில் எடுக்கவேண்டும். ஆனால் தம் ஜீவனையே ஜாமீன் தொகையாக கொடுக்க வேண்டுமென்றால் யார் தருவார்?

யோவான் 15:13. ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை. ஆகவே தம் ஜீவனையே கொடுக்க, கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார். உயிர் எதில் இருக்கிறது.

ஆதி 9:4. லேவி 17:11. மாம்சத்தை அதின் உயிராகிய இரத்தத்தோடே புசிக்கவேண்டாம். மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது. ஆகையால் தான் கிறிஸ்து இயேசு கல்வாரிச் சிலுவையில் கடைசி சொட்டு இரத்தத்தையும் நமக்காக சிந்தினார். நம்மை பாவத்திலிருந்து மீட்க, நமக்கு இரட்சிப்பைத்தர லூக்கா1:77, 1கொரி 15:3, நமது பாவங்களுக்காக மரித்து, 1பேதுரு 1:19 குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய

கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே நாம் மீட்கப்படவே இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்தார்.

இயேசு கிறிஸ்துவின் முதலாம் வருகை.

 தேவனை விட்டு விலகி, பாவத்திலும், சாபத்திலும் இருந்த தம்முடைய ஜனங்களை மீட்கவே இயேசு கிறிஸ்து உலகத்திற்கு வந்தார். தேவன் மனிதனுக்கு கொடுத்த அதிகாரம் ஆளுகை, உரிமை எல்லாவற்றையும் பிசாசு பிடுங்கி கொண்டு போய் விட்டான். ரோமர் 5:19படி பாவிகளான நம்மை பாவத்தில் இருந்து மீட்க ஒருவர் தேவை. அவர் பாவமில்லாதவராக இருக்கவேண்டும். பிர 7:20 ஒரு பாவமும் செய்யாமல், நன்மையே செய்யத்தக்க நீதிமான் பூமியிலில்லை. 1இராஜ 8:44 பாவஞ்செய்யாத மனுஷன் இல்லையே. சங் 51:5 இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன் என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்.

ரோமர் 3:10-18 அந்தப்படியே: நீதிமான் ஒருவனாகிலும் இல்லை

11. உணர்வுள்ளவன் இல்லை தேவனைத் தேடுகிறவன் இல்லை

12. எல்லாரும் வழிதப்பி, ஏகமாய்க் கெட்டுப்போனார்கள் நன்மைசெய்கிறவன்இல்லை, ஒருவனாகிலும் இல்லை.

13. அவர்கள் தொண்டை திறக்கப்பட்ட பிரேதக்குழி, தங்கள் நாவுகளால் வஞ்சனைசெய்கிறார்கள் அவர்களுடைய உதடுகளின் கீழே பாம்பின் விஷம் இருக்கிறது

14. அவர்கள் வாய் சபிப்பினாலும் கசப்பினாலும் நிறைந்திருக்கிறது

15. அவர்கள் கால்கள் இரத்தஞ்சிந்துகிறதற்குத் தீவிரிக்கிறது

16. நாசமும் நிர்ப்பந்தமும் அவர்கள் வழிகளிலிருக்கிறது

17. சமாதான வழியை அவர்கள் அறியாதிருக்கிறார்கள்

18. அவர்கள் கண்களுக்கு முன்பாகத் தெய்வபயமில்லை, என்று எழுதியிருக்கிறதே. தேவன்ஆதி 3:15.ல் கூறிய முதல் தீர்க்கதரிசன வசனத்தின்படி ஸ்திரியின் வித்தாகிய இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் வந்துதிக்க நாலாயிரம் ஆண்டுகள் ஆயிற்று. லூக்கா 19:10 ன்படி இழந்து போனதைத் தேடவும், இரட்சிக்கவுமே, நீதி 8:30 அவர் அருகே செல்லப்பிள்ளையாக, அப் 4:30 பரிசுத்த பிள்ளையாக இருந்த இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்தார். யோவான் 8:46ல் என்னில் பாவம் உண்டென்று உங்களில் யார் என்னைக் குற்றப்படுத்தக்கூடும் என்று கேட்டார். ஆகவே இயேசு கிறிஸ்து ஆணின் வித்திற்கும், பெண்ணின் வித்திற்கும் பிறக்காமல், லூக்கா 1:35ன் படி எபி10:5 ஆயத்தம் பண்ணப்பட்ட சரீரத்தில் பிறந்தார். இவருடைய பிறப்பு தற்செயலாகவோ ஏனோதானோவென்றோ இல்லாமல் ஏறக்குறைய நாலாயிரம் ஆண்டுகளாக எங்கு, எப்படி, எப்பொழுது என்று முன்னுரைக்கப்பட்ட தீர்க்கதரிசனங்களின்படியே நடந்தேறியது.

யூதேயாவிலுள்ள பெத்லேகேமில் பிறப்பார் என்று மீகா 5:2-ம், ஸ்திரியின் வித்தாக பிறப்பார் என்று ஆதி 3:15ம், கன்னிகையிடத்தில் பிறப்பார் என்று ஏசாயா 7:14ம் யாக்கோபில் ஒரு நட்சத்திரம் உதிக்கும் என்று எண் 24:17ம், யூதா கோத்திரத்தில் பிறப்பார் என்று ஆதி 49:10ம் சொல்லப்பட்ட தீர்க்க தரிசனங்கள்படியே இயேசுகிறிஸ்து பிறந்தார். அவர் நாசரேத்தில் வளர்வார் என்றும், எகிப்துக்கு சென்று திரும்புவார் என்று ஓசியா 11:1ம் அவர்மேல் ஆவியானவர் இருப்பார், அவருடைய ஊழியத்தில் அநேக தரித்திரர் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்று ஏசா 11:2ம் முன்னுரைக்கப்பட்டது

அவரோடே பழகினவனே அவரைக்காட்டி கொடுப்பான் என்றும் சங்கீதம் 41:9 அவர் வஸ்திரத்திற்கு சீட்டு போடப்படும் என்றும் சங்கீதம் 22:18 அவருக்கு காடியை குடிக்க கொடுப்பார்கள் என்றும் சங்கீதம் 69:21 அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்படுவார் என்றும் ஏசாயா 53:12 அவருடைய எலும்புகளில் ஒன்றாகிலும் முறிக்கப்படுவதில்லை என்றும் சங்கீதம் 34:20 அவருடைய மரணத்தை குறித்து தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது.

ஐசுவரியவானுடைய கல்லறையில் அடக்கம் பண்ணப்படுவார் என்றும் ஏசாயா 53:9, பரிசுத்தரின் அழிவை காணவொட்டீர் என்று சங்கீதம் 16:10ம், உன்னதத்திற்கு ஏறி சிறைப்பட்டவர்களை சிறையாக்கி கொண்டு போனீர் என்று சங்கீதம் 68:18ம் அவருடைய உயிர்த் தெழுதலைக் குறித்தும் எழுதப்பட்டிருக்கிறது. குறிப்பிட்ட காலத்தில் இயேசு கிறிஸ்து மனுஷ குமாரனாக பிறந்த பொழுது அநேகர் அறியவில்லை, ஏற்றுக்கொள்ளவுமில்லை. தேவத் தூதர்களும், மனிதனும் தேவனால் படைக்கப்பட்டவர்கள் தான். தேவத்தூதனும், மனிதனும் தேவனுக்கு விரோதமாக பாவம் செய்தார்கள் இருவரும் தள்ளப்பட்டவர்கள்தான். ஆனால் இந்த இருவரில் மனிதன் ஒருவனுக்கே மீண்டும் தேவனுடன் இணைய ஒர் வழியை ஏற்படுத்தினார். அதுதான் இயேசுகிறிஸ்து மூலம் வந்த இரட்சிப்பு. மத்தேயு 1:21 அவன் ஒரு குமாரனைப் பெறுவாள். அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக. ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான். மனிதன் தேவசாயலாக அவர் ரூபமாக சிருஷ்டிக்கப்பட்டவன். இவன் பாவியல்ல. பிசாசினால் வஞ்சிக்கப்பட்டு, ஏமாற்றப்பட்டு பாவியாக்கப்பட்டவன். ஆதலால் அவன் மனந்திரும்ப, இரண்டாம் சந்தர்ப்பத்தை தர, அவனை இரட்சிக்க இயேசுகிறிஸ்து உலகத்திற்கு வந்தார்.

இப்படிக்கு
அன்பரின் பணியில் அன்பு சகோ. **பிரபு**

# சகோதரிகள் பகுதி

## தேவனின் ஆசீர்வாதத்தைப் பெறுவது எப்படி?

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரிகளுக்கு மரித்து உயிர்த்தெழுந்து இன்றும் ஜீவிக்கிற நம் ஜீவனுள்ள தேவன் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். மீண்டுமாக இந்த மாத செய்தி மலர் மூலமாக உங்களை சந்திப்பதில் கிறிஸ்துவுக்குள் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். தேவ ஆசீர்வாதத்தை பெறுவது எப்படி என்கிற தலைப்பில் வேத வசனத்தின் அடிப்படையில் நாம் 1.கர்த்தரைத் தேடுதல் 2.துதித்தல் 3.நாடுதல் 4.விலகி ஓடுதல் 5.ருசித்து பார்த்தல் என்று ஒரு ஐந்து காரியங்களை குறித்து தியானிப்போம். முதலாவதாக நாம் கர்த்தரை தேடுதல் என்ற தலைப்பில் தியானிப்போம்

### 1. கர்த்தரைத் தேடுதல்:

கர்த்தரைத் தேடுங்கள் அப்பொழுது பிழைப்பீர்கள் (ஆமோஸ்5:6) தனிப்பட்ட நபராகவோ குடும்பமாகவோ அல்லது சபையாகவோ ஆண்டவரைத் தேடினால் நமக்கு நீண்ட ஆயுளோடு வாழ தேவன் நமக்கு கிருபை செய்வார். குடும்ப ஜெபம் என்பது மிகவும் அவசியமான ஒன்றாகும். குடும்ப ஜெபம் இல்லாத வீட்டை கூரை இல்லாத வீட்டிற்கு ஒப்பிட்டு கூறுவர்.மனத் தாழ்மையோடும், உபவாசத்தோடும், கண்ணீரோடும் நாம் ஜெபிக்கின்ற ஜெபம் நிச்சயமாகவே நமக்கு வெற்றியையும் ஆசீர்வாதத்தையும் மாத்திரமே நமக்கு தரும்.இரண்டாவதாக துதித்தல் என்ற தலைப்பை குறித்து பார்ப்போம்.

### 2. துதித்தல்:

பிறர் காண்கிறார்கள் என்றோ மாய்மாலத்தோடோ நாம் தேவனைத் துதிக்கக்கூடாது. முழுஇருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும் நம் ஆண்டவரைத் துதிக்க வேண்டும். சங்கீதம் 136-ஆம் அதிகாரம் முழுவதும் கர்த்தரைத்

நமக்கு விளக்கிக் காட்டுகிறது. அவரைத் துதிப்பதன் மூலமாக அவருடைய கிருபை நம்மோடு கூட இருப்பதை நம்மால் ஒவ்வொரு நிமிடமும் உணரமுடிகின்றது. துதிப்பதின் மூலமாக நம் அன்றாட வாழ்வின் பிரச்சனையிலிருந்து நமக்கு ஒரு மனஅமைதி கிடைக்கிறது. மூன்றாவதாக நாடுவது எப்படி என்பதை குறித்து பார்ப்போம்

## 3. நாடுதல்:

1கொரிந்தியர் 13:13ல் அன்பை பற்றி நாம் காண்கிறோம். அன்பே பெரியது. அன்பை நாம் நாடவேண்டும் நாம் ஒருவருக்கொருவர் அன்பாயிருத்தல் மிகவும் அவசியமானதாகும். அன்பே பிறருக்கு நம் சாட்சியையோ அல்லது சுவிசேஷத்தையோ அறிவிக்கும் படி நம் உள்ளத்தில் ஏவுகின்றது. ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துவதை நாம் நாட வேண்டும். ஆண்டவருடைய அன்பு எதற்கும் ஈடாகாது. அது விலையேறப் பெற்றது. நம் வாழ்வில் பரிசுத்தத்தை நாடுவதும் மிக அவசியமானதாகும்.

நான்காவதாக பாவத்திற்கு விலகி ஓடுதலை குறித்து தியானிப்போம்.

## 4. விலகி ஓடுதல்:

வேசிதனத்திற்கு நாம் விலகி ஓட வேண்டும். யோசேப்பு தன் வாழ்க்கையில் பாவத்திற்கு விலகி ஓடினான் தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்வது எப்படி? என்று போத்திபார் மனைவியிடம் கூறினான். நாம் தேவனுக்கு பயந்திருந்தால் பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு நாம் விலகி ஓடமுடியும். ஆதியாகமம் 39:9,12. விக்கிரக ஆராதனைக்கும் நாம் விலகி இருக்கவேண்டும். நம்முடைய இலக்கு இயேசுவை நோக்கியும் நமக்கு நியமித்திருக்கிற இந்த வாழ்க்கையாகிய ஓட்டத்தில் பொறுமையோடு நாம் ஓடி ஆசீர்வாதம் என்னும் பந்தயப்பொருளை நாம் பெற்றிட வேண்டும். ஐந்தாவதாக கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்து பார்ப்போம்

## 5. ருசித்துப்பார்த்தல்:சங்கீதம் 34:8

கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள் அவருடைய சிலுவையின் அன்பினை நமக்காக அவர் செய்த தியாகத்தை அனுதினமும் ருசித்துப் பார்க்கவேண்டும். வேதத்தின் இரகசியங்களை நாம் ருசிக்கவேண்டும். சகரியா 9:12 இரட்டிப்பான நன்மையைத் தருவேன், இன்றைக்கே தருவேன்.தசமபாகத்தில் பத்தில் ஒருபாகம் நம் ஆண்டவருக்கு செலுத்துவதன் மூலமாக நாம் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

நம் பிள்ளைகளை கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்திலும்,ஞானத்திலும் நாம் வளர்க்க வேண்டும். தாயும், தகப்பனும், நம் பிள்ளைகளுக்கு ஓரு முன்மாதிரியை காண்பிக்கின்றவர்களாக நம் வாழ்க்கை மாற வேண்டும். ஒருவருக்கொருவர் நாம் விட்டுக்கொடுத்து வாழவேண்டும். மேலும் ஜெபஜீவியத்திலும் வேதவாசிப்பிலும் நம் ஜீவியத்தை கட்டி எழுப்பவேண்டும். தேவன் நம் யாவர் மீதும் மிகவும் அன்புள்ளவராகவே இருக்கிறார் எனவே அவர் முகத்தையும் அவர் பாதத்தையும் தேடுங்கள்! நாடுங்கள்!

அளவற்ற ஆசீர்வாதத்தைப் பெறுங்கள்!
கர்த்தர் நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக ஆமென்!
கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரி. பியூலா பால் ஜெகநாதன்

# கடந்த மாத நிகழ்வுகள்

**சபையின் மூலம் அழைத்துவரப்படடஇந்திய தேச ஊழியர்**
**Rev. T.Samuel அவர்கள் நம்முடைய மத்தியிலே கலந்து கொண்டு**
**தேவ செய்தி அளித்தார்**













அநேகர் கலந்து கொண்டு தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுச் சென்றனர்

உங்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்காக ஜெபியுங்கள்

செயலாளர் சகோ. ஜஸ்டின் சுந்தராஜ்

97153421- 97376456

பொருளாளர் சகோ. ஜெயசேகர்

23711698 - 66442727 - 90024654

பெண்கள் ஐக்கிய சங்க தலைவி

சகோதரி : அனுஷுயா டேவிட்ஸன்

23922536-97148472

வாலிப ஐக்கிய குழு தலைவர்

சகோ. எபிநேசர் 23922058- 66857827

சபையின் அஞ்சல் விலாசம்

your Name...... Post box no 46795,
Fahaheel 64018 KUWAIT

Church E mail Address
ahmaditamil@hotmail.com

Church Website Address
www.ahmaditamilcongregation.org

தங்களது ஜெப விண்ணப்பங்கள் எதுவாக இருந்தாலும் எங்களுக்கு தெரிவிக்கவும், உங்களுக்காக ஜெபிக்க எப்பொழுதும் ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது

Private circulation